## பத்திரிக்கைச் செய்தி ___ வேலைவாய்ப்பு அறிவிப்பு

### புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்

### பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப்பணிடங்களுக்கான நேரடி நியமனம்

ந.க.எண். 460 / 2020 / சதி1 நாள்: .09.2020

திருவள்ளூர் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள 179 அமைப்பாளர்கள் மற்றும் 247 சமையல் உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பிட பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டுமே பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணிவிவரம் | கல்வித் தகுதி | வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | அமைப்பாளர் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>➢ பழங்குடியினர் எட்டாவது தேர்ச்சி/ தோல்வி பெற்றிருக்க வேண்டும் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், குறிப்பிட்ட தேதியில் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ பழங்குடியினர் 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ மாற்றுத்திறனாளிகள் 43 வயதுக்கு மிகாதவராக இருக்க வேண்டும். |
| 2 | சமையல் உதவியாளர் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் 5ஆம் வகுப்பு தேர்ச்சி (அ) 5ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்.<br>➢ பழங்குடியினர் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் | ➢ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர்களுக்கு 21 வயது பூர்த்தி அடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ பழங்குடியினர் 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.<br>➢ விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். |

காலியாகவுள்ள பணியிடங்கள் அரசாணையின்படி நிரப்பப்படும் கல்வித்தகுதி இருப்பிடம், ஜாதி, விதவை / கணவரால்கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர முன்னுரிமை ஆகியவற்றுக்கான ஆதார்ச்சான்று நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

1) பாஸ்போட் சைஸ் போட்டோ விண்ணப்பத்தில் ஒட்டப்படவேண்டும்
2) பள்ளி மாற்றுச்சான்றிதழ் (T.C) நகல்
3) கல்வித்தகுதி சான்று நகல்
4) மதிப்பெண் சான்று நகல்
5) இருப்பிடச்சான்று நகல்
6) சாதிச் சான்று நகல்
7) விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவர்களாக இருப்பின் உரிய அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் நகல்
8) மாற்றுத்திறனாளிகளாக இருப்பின் அதற்கான சான்றிதழ் நகல்

நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்பிற்கும் இடையே உள்ள தூரம் 3-கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும். காலியிடமுள்ள பள்ளி, பள்ளிகளுக்கான இனசுழற்சி விவரம், சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் / மாநகராட்சி அலுவலகங்களில் ஒட்டப்பட்டிருக்கும் விண்ணப்ப நகல் சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை இலவசமாக வழங்கப்படும்.

வயது வரம்பு, 31.08.2020ம் தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 24.09.2020 முதல் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய / மாநகராட்சி ஆணையாளர்களுக்கு 03.10.2020 ஆம் தேதி முடிய அலுவலக வேலை நேரத்திற்குள் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பப்பட வேண்டும் இதற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலும் விவரங்களுக்கு ஊராட்சி ஒன்றிய / மாநகராட்சி ஆணையாளர்களை தொடர்பு கொள்ளவும் விண்ணப்பங்கள் உரிய பரிசீலனைக்குப் பின் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்வுக்கான அழைப்பாணை அனுப்பப்படும். அழைப்பாணையில் தெரிவிக்கப்படும் தேதியில் குறிப்பிட்ட இடத்தில் நேர்முக தேர்விற்கு மனுதாரர் அசல் ஆவணங்களுடன் ஆஜராக வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருவள்ளூர்.

23/9/2020